**செய்தி வெளியீடு எண். 916** **நாள். 28.10.2008**

**வேளாண்மை ஆணையரகம், சென்னை–5.**

**பத்திரிக்கைச் செய்தி**

# வேளாண் தேவைகள் மற்றும் சேவைகள் அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்கச்செய்ய தமிழக அரசின் திட்டம்

வேளாண்மைப் பணியில் தேவைப்படும் அனைத்து இடுபொருட்கள் மற்றும் தேவைகளும் ஒரே இடத்தில் விவசாயிகளுக்கு கிடைக்கச்செய்யும் வகையில் வேளாண் ஆலோசனை மற்றும் சேவை மையத்தினை நமது மாநிலத்தில் 385 வட்டாரங்களிலும் அமைக்க அரசு ஆணை வழங்கியதன் மூலம் தமிழகத்தின் வேளாண்மையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

ரூ.33 கோடி செலவில் வேளாண் ஆலோசனை மையம், பண்ணை இயந்திர சேவை மையம் மற்றும் விதை சுத்திகரிப்பு மையம் அமைக்கும் மூன்று முக்கிய திட்டங்களின் உதவிகள் ஒருங்கிணைக்கப்பட்டு, உரம், பூச்சிக்கொல்லி மருந்து, நுண்ணீர் பாசன உபகரணங்கள் மற்றும் சான்று விதைகள் ஆகிய இடுபொருட்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் மையங்களாகவும் செயல்படும்.

தமிழகத்தின் வேளாண்மைத் துறையின் செயலர் திரு. சுர்ஜித் கே. சௌத்ரி அவர்கள், ‘‘வேளாண்மை தொழிலை பொருளாதார ரீதியாக, இலாபம் தரக்கூடிய வணிகத்தொழிலாக மேம்படுத்துவதே எங்கள் எண்ணம். தற்போது வேளாண்மை மூலம் இலாபம் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. வேளாண்மையை அறிவியல் ரீதியாக மேற்கொண்டால், கிராமப்புற மக்களுக்கு பெரிய அளவில் வேலைவாய்ப்பினை வேளாண்மைத் தொழிலினால் வழங்க முடியும். ஒருங்கிணைந்த வேளாண்மை வணிக மையங்களின் மூலம் அதிக அளவில் வருமானம் பெறமுடியும். மகாராஷ்டிராவில் இதுபோன்று இயங்கிவரும் மையங்கள் ஒவ்வொன்றும் 100 பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி வருகின்றது ’’ என்று தெரிவித்தார்.

வேளாண் ஆலோசனை மையங்கள் அமைக்க வேளாண்மை பட்டதாரிகள் மட்டுமே தகுதியானவர்கள் என நிர்ணயிக்கப்பட்ட விதி தளர்த்தப்பட்டு, இம்மையங்களுக்கான உதவிகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அரசு தற்போது நிர்ணயித்துள்ள விதிமுறைகளின்படி, வேளாண்மை அல்லது அதன் தொடர்பான கல்வியில் பட்டம்பெற்ற மற்றும் பட்டயப்படிப்பு தகுதி உள்ளவர்கள்,

இவ்வேளாண் வணிக மையங்களை அமைக்க முன் வரலாம். மேலும், ஓய்வுபெற்ற விஞ்ஞானிகள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் வேளாண்மைத்துறை தொழில்நுட்ப அலுவலர்களும் இம்மையங்களைத் தொடங்க தகுதியானவர்கள். தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களும் இம்மையங்களைத் தொடங்கலாம்.

திட்ட வரைமுறைகளின்படி, வேளாண் ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட்ட பின், அம்மையத்தை அமைத்தவர் விண்ணப்பத்தின் அடிப்படையில் அரசு மானியமாக ரூ.3 லட்சம் வழங்குகிறது. டிராக்டர், பவர் டில்லர், லேசர் மூலம் நிலம் சமப்படுத்தும் இயந்திரம், உழிக்கலப்பை, விதை விதைக்கும் இயந்திரம், அனைத்து பயிர்களுக்கும் பயன்படுத்தும் கதிரடிக்கும் இயந்திரம் போன்ற பண்ணை இயந்திரங்களை வாங்குவதற்கு குறைந்தபட்சம் ரூ.16 இலட்சம் முதலீடு செய்தவர்களுக்கு அரசு மானியமாக ரூ.4 இலட்சம் வழங்கும். மேலும் விதை சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் விதை நேர்த்தி மையம் அமைக்க குறைந்தபட்சம் ரூ.21.50 இலட்சம் முதலீடு செய்தால், அரசு மானியமாக ரூ.7.5 இலட்சம் வழங்கும்.

இம் மூன்று மையங்களையும் அமைக்கும் தனி நபருக்கு அல்லது முகமைக்கு நுண்ணீர் பாசன கருவிகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், சான்று விதைகள் போன்ற இடுபொருட்களையும் விற்பனை செய்ய தகுதியானவர்களாக கருதி அனைத்து உரிமங்களும் வழங்கப்படும். இடுபொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இத்தகைய வேளாண் வணிக மையங்களை தங்கள் இடுபொருட்களை விற்பனைசெய்யும் நிலையங்களாக நியமிக்க அறிவுறுத்தப்படுவார்கள். ''மண் பரிசோதனை முதல், கதிரடிக்கும் இயந்திரம் வாடகைக்கு பெறுதல்வரை விவசாயிகளின் அனைத்து தேவைகளையும் இவ்வேளாண் வணிக மையயங்களில் விவசாயிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்வதே தமிழக அரசின் நோக்கம்'' என திரு. சௌத்ரி அவர்கள் தெரிவித்தார்கள்.

**வேளாண்மை ஆணையர்.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9